, [1972 மார்ச் 8

மணிமுத்தாறு தண்ணீர்

*367 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் வடக்கு கோடை மேல், தெற்கு கோடை மேல், அழகியனிகால், நதியுண்ணிகால், ஆகிய மூன்று கால்வாய்களுக்கு விவசாயத்திற்கு மணிமுத்தாறு தண்ணீர் விடப் படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

மலட்டாற்றுத் திட்டம்

*368 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், மலட்டாறு திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தைப் பற்றிய தொழில்நுட்பக் கூறுகள் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : இந்த மலட்டாறுத் திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஆய்வில் இருக்கிறது. அந்தப் பின்தங்கிய பகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும் வகையில் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுமார் 60 லட்சம் ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலத்தில் பாசனம் அளிக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் அங்கு கிடைக்கும் நீரின் அளவு, நீரியல் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

1972 மார்ச் 8]

முதுகுளத்தூர் வட்டத்தில் குறைந்த அளவே மழை பெய்வதால் இந்த ஆறுகளின் தன்மையைப் பற்றியும், அளவைப் பற்றியும் அதிகாரிகள் கவனமாகப் பரிசீலித்து முடிவு கூறிய பிறகுதான் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். இராமநாதபுரம் மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் இதுபற்றி ஆராய்ந்து முடிவு கூறிய பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த மலட்டாறு என்ற பெயர் நன்றாக இல்லை. அதை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிலைமை அப்படி இருக்கும் காரணத்தால் ஒருவேளை அப்படிப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப் படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்ட பிறகு அது நீர்ப்பாசன வசதிக்குப் பயன்படும் என்றும் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் சொன்னார்கள். அப்படி எடுத்துக்கொண்ட பிறகாவது மலட்டாறு என்ற பெயரை மாற்றி வேறு பெயர் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விஞ்ஞான முறைப்படி இந்தக் காலத்தில் மலடிகள் கூடப் பிள்ளைகள் பெற முடியும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தத் திட்டம்பற்றி நீண்ட காலமாகப் பேசப்பட்டு இப்போதுதான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலாவது பணி துவங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முதுகுளத்தூர் வட்டத்தில் ஏற்கெனவே சில நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அங்கிருக்கும் நிலைமைகள், மழை பெய்யும்

நன்மை ஆகியவற்றைப்பற்றி அதிகாரிகள் பரிசீலித்து, எகனமிக் ஸ்கீம் என்று தெரிவித்தால் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: அந்தப் பகுதியில் இருக்கும் நிலம் சரியில்லை என்ற காரணத்தால் அந்தப் பெயர் வைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையிலேயே அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்கள் வளமான நிலங்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அங்கு தண்ணீர் கிடைக்காத காரணத்தால்தான் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்பதால், அதற்கு வேண்டிய தண்ணீரைக் கேரள மாநிலத்திலிருந்தாவது பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவற்றை வளமான நிலமாக மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதுகளத்தூர் பகுதியில் மழை குறைவாகப் பெய்வதாகவும் பொறியியல் துறையினர் அதுபற்றி ஆய்ந்து வருவதாகவும் சொன்னார்கள். மலட்டாறுக்கு வருகின்ற தண்ணீர் மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து கிருதுமால் நதி, பரலியாறு, குண்டாறு போன்றவற்றில் இருந்து வந்து தற்போது வீணாகக் கடலில் சென்று கலந்து கொண்டிருக்கும் காரணத்தால், அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன் படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் முதுகளத்தூருக்குச் சமீபத்தில் வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதிகாரிகள் இதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தால் நிச்சயமாக நிறைவேற்றி வைக்கப்படும்.